வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 12.04.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- மகளிருக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதாவை நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளும் ஒருமனதாக நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
- மேற்கு வங்க மாநிலத்தில், 2 கட்டங்களாக நடைபெற உள்ள தேர்லையொட்டி, அரசியல் கட்சித் தலைவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.
- மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, புதுடெல்லியில் நடைபெற்ற FIT INDIA SUNDAY ON சைக்கிள் பேரணியில் பங்கேற்றார்.
- தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி, பல்வேறு அரசியல் கட்சிகள் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

*பிரதமர் -1 (16)*

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதாவை நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளும் ஒருமனதாக நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். நாடாளுமன்றத்தின் 3 நாள் சிறப்பு கூட்டத்தொடர் வரும் 16ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில, இரு அவைகளில் உள்ள கட்சிகளின் தலைவர்களுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள கடிதத்தில்

மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை, உண்மையான உத்வேகத்துடன் நிறைவேற்றுவதற்கான தருணம் வந்து விட்டதாக கூறினார்.

நாரி சக்தி வந்தன் அதினியம் எனப்படும் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தில், திருத்தங்களை ஒரே குரலில் நிறைவேற்ற அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வருகிற 2029ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில், மகளிர் இட ஒதுக்கீட்டு சட்டத்தை அமல்படுத்தும் நோக்கத்துடன் இந்த கூட்டம் நடத்தப்படுவதாகவும், பெண்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் எந்த சமுதாயமும் முன்னேற்றம் அடையும் என்று பிரதமர் தெரிவித்தார்.

*__பிரதமர் - 2 (14)__*

இதற்கிடையே காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மத்திய அரசு இந்த விஷயத்தை கையாளும் முறை குறித்து கவலை தெரிவித்தார். சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, விரிவாக விவாதிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

வரும் 16ஆம் தேதி முதல் – 18ஆம் தேதி வரை, நடைபெற உள்ள நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரின்போது, பாஜக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று, அக்கட்சி கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளது. கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் யாருக்கும் விடுப்பு அளிக்கப்படாது என்று கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டம் நடைபெறும் 3 நாட்களிலும், மத்திய அமைச்சர்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்றும் கொறடா உத்தரவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மகளிர் இட ஒதுக்கீடு சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றுவதற்காக இந்த சிறப்புக் கூட்டம் நடத்தப்படுகிறது.

*மோடி பிரச்சாரம் -1 (16)*

மேற்கு வங்க மாநிலத்தில் 15 ஆண்டுகளாக பதவியில் இருக்கும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, மக்கள் நலனுக்காக எதையுமே செய்யவில்லை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார். மேற்கு வங்க மாநிலம் சிலிகுரியில், தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். மேற்கு வங்க மாநில மக்களிடையே நிலவும் உற்சாகம், வரவிருக்கும் தேர்தலில், ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் தோல்வியை சந்திக்கும் என்பதை சுட்டிக்காட்டுவதாகக் கூறினார்.

இங்கு பதவியில் இருக்கும் கட்சி மக்களிடம் பொய்யான வாக்குறுதிகளை அளித்து வருவதாகவும், இதனால் மக்கள் அக்கட்யின் கூயரூபத்தை புரிந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில அரசு பெண்களுக்கு போதுமான பாதுகாப்பை உறுதி செய்யவில்லை என்றும் பிரதமர் குற்றம் சாட்டினார். மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கு பாஜக அரசுக்கு ஆதரவு அளிக்குமாறு அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

மேற்கு வங்க மாநிலத்தில், பாஜக ஆட்சி அமைந்தவுடன், மக்களின் அச்சம் போக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஊழல்வாதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

*மோடி பிரச்சாரம் -2 (6)*

இதற்கிடையே, திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, கண்டகோஷ் பூர்வா பர்தமானில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். அவர் தமது உரையில், பாஜகவை கடுமையாக விமர்சனம் செய்தார். தனது கட்சி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்றும், ஆனால் பாஜக தலைவர்கள் வாக்குறுதிகளை அழித்துவிட்டு, அவற்றை நிறைவேற்றுவது இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

***<u>மன்சுக் மாண்டவியா -1 (3)</u>***

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, புதுடெல்லியில் நடைபெற்ற FIT INDIA SUNDAY ON சைக்கிள் பேரணியில் உற்சாகமாக பங்கேற்றார்.

***<u>மன்சுக் மாண்டவியா - 2 (10)</u>***

(வாய்ஸ்)

<u>FIT INDIA SUNDAY ON சைக்கிள் பேரணியாவனது தற்போது நாடு தழுவிய அளவில் மக்கள் இயக்கமாக மாறி உள்ளதாக, தெரிவித்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இந்திய இளைஞர்களிடையே, உடல் தகுதி குறித்த விழிப்புணர்வு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, முன்னேறி உள்ளதாக அவர் தெரிவித்தார். ஆரோக்கியமான குடும்பங்களால் மட்டுமே, ஒரு வலிமையான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றும், அத்தகையை ஆரோக்கியமான சமூகமே ஒரு வளமான தேசத்தை படைக்க அடைத்தளமாக அமையும் என்றும், அவர் தெரிவித்தார்.</u>

***<u>தேசிய நெடுஞ்சாலை (8)</u>***

நாடு முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் சுங்கச் சாவடிகளில் செலுத்தப்படும் பயணிகளின் கட்டணங்கள் அனைத்தும், Fastag - UPI டிஜிட்டல் வாயிலாக மட்டுமே வசூலிக்கப்படுவதாக, மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இம்மாதம் 10ஆம் தேதி முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாக, கூறிய அமைச்சகம், தற்போது அமலியில் உள்ள தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக, தமிழ்நாடு, அசாம், கேரளம் மற்றும் புதுச்சேரியில் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று கூறியுள்ளது.

*ஆஷா போஸ்லே (16)*

புகழ் பெற்ற பாடகியும், பத்ம விபூஷன் விருது பெற்றவருமான ஆஷா போஸ்லே மும்பையில் இன்று காலமானார். அவருக்கு வயது 92. மார்பு தொற்று நோய் மற்றும் சோர்வு காரணமாக, நேற்று மாலை மும்பையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, தீவிர சிசிக்சை அளிக்கப்பட்டது. இந்நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று அவர் காலமானானார். இறுதிச் சடங்குகள் நாளை மாலை 4 மணிக்கு, சிவாஜி பூங்காவில் நடைபெறும் என்று, மகாராஷ்டிர மாநில கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. ஆஷிஷ் ஷெலர் தெரிவித்தார்.

ஆஷா போஸ்லே நவீன இந்திய இசையின் சிறந்த பாடகர்களில் ஒருவராக கருதப்பட்டார். 1943ஆம் ஆண்டில் தனது முதல் திரைப்படப் பாடலைப் பாடி, புகழ்பெற்ற அவர், 1950களில் திரைப்பட உலகில் தனக்கென ஒரு தனித்துவமான அடையாளத்தை ஏற்படுத்தினார். பல ஆண்டுகளாக அவர் மிகவும் விரும்பப்பட்ட பின்னணி பாடகர்களில் ஒருவராக இருந்தார். அவது, பல்வேறு இந்திய மொழிகளில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். தென்னிந்திய நடிகர்கள் வரை, பல முன்னணி பெண்களுக்கு குரல் கொடுத்துள்ளார்.

*அமித் ஷா பிரச்சாரம் (10)*

மேற்கு வங்க மாநிலத்தில் ஊழல்வாதிகளின் அத்துமீறலை, ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசு சிறிதளவும் கண்டுக்கொள்ளவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குற்றம் சாட்டினார். மேற்கு வங்க மாநிலத்தில் நேற்றிரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், செல்வி மம்தா பானர்ஜி அரசு ஊடுருவல்காரர்களை தடுக்க தவறிவிட்டதாகவும், அவர்களின் அத்துமீறிய செயலை அரசு வேடிக்கை பார்ப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். மேற்கு வங்க மாநிலத்தில் வளர்ச்சியை எற்படுத்தவும், ஊடுருவல் பிரச்சனைக்கு முடிவு கட்டவும், மக்கள் பாஜக அரசுக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

***ஜெய்சங்கர் (11)***

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஐக்கிய அரபு நாடுகள் பயணத்தில், 2ஆம் நாளான இன்று, மேற்கு ஆசிய போர் சூழல் காரணமாக இந்தியர்களின் பாதுகாப்புக் குறித்து, அபுதாபியில் நடைபெற்ற உயர்நிலை பேச்சுவார்த்தையில், ஆய்வு மேற்கொண்டார்.

அமீரகத்தின் துணைப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான திரு. ஷேக் அப்துல்லாவின் பேச்சுவார்த்தையிலும் அவர் பங்கேற்றார். மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து அவர் கவலை வெளியிட்டார்.

இந்தியர்கள் பாதுகாப்பு மற்றும் நலன்களில், அக்கறைக் எடுத்துக் கொண்டதற்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். தொடர்ந்து, இந்திய சமூகத்தினர் இடையே கலந்துரையாடல் நடத்தியதாகவும், அவர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

***தமிழ்நாடு தேர்தல் பிரச்சாரம் -1 (15)***

தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டம் சாத்தூரில், மாநில பாஜக தலைவர் திரு. நயினார் நாகேந்திரனுக்காக, பாஜக தேசிய தலைவர் திரு. நிதின் நபின் பிரச்சாரம் செய்து வருகிறார். முன்னாள் எம்.பியும், நடிகருமான திரு. சரத் குமார் மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்கள், சாத்தூரில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில் பங்கேற்றனர். பாஜக, அதிமுக, பாமக மற்றும் NDA கூட்டணிக் கட்சியை சேர்ந்தவர்களும் இப்பேரணியில் பங்கேற்றனர்.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் இன்று காலை கட்சி வேட்பாளர்களுக்காக பரமக்குடியில் வாக்குச் சேகரித்தார். மேலும் ஒரு மைல் தூரம் நடந்து சென்று பொதுமக்களிடம் உரையாடினார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், நடிகருமான திரு. விஜய் இன்று கன்னியாகுமரியில், தமது கட்சி வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்தார்.

நாம் தமிழர் கட்சித் தலைவர் திரு. சீமானும், உசிலம்பட்டியில் தமது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து வருகிறார். மேலும் இது குறித்த கூடுதல் தகவல்கள்...

***தமிழ்நாடு தேர்தல் பிரச்சாரம் - 2 (15)***

தமிழகத்தில் நடைபெற உள்ள ஒரே கட்ட தேர்தலுக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில், மாநிலத்தின் ஒவ்வொரு தெருக்களும் வண்ணமயமாக காட்சி அளிக்கின்றன. ஒவ்வொரு அரசியல் கட்சியும், ஒலி பெருக்கியில் பிரத்யேகப் பாடலைப் பாடி போட்டியாளர்களும், தலைவர்களும் வாகனங்களில் தோன்றுகின்றனர். இன்று ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறைநாள் என்பதால், தங்களை கடந்து செல்லும் தலைவர்களை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என்று மக்கள் முண்டியடித்து ஓடுவதை காண முடிகிறது. எந்தப் பிரச்சனையையு பொருட்படுத்தாமல், தேர்தல் பிரச்சனையை காண மக்கள் தங்கள் குழந்தைகளை அழைத்து வருவதை காணமுடிகிறது. செய்திச் சேனல்களைத் தவிர, புதிய யுடியூப் சேனல்களும் இந்த சாலை பொதுக்கூட்டத்தை ஒளிரப்புகின்றன. அதன் மூலம்அவை பிரபலம் அடைந்து வருகின்றன. மொத்தத்தில் தமிழக தேர்தல் களம் கோடை வெப்பத்துடன் சூடு பிடித்துள்ளது.

***மீனவர்கள் (6)***

ஈரானில் சிக்கித் தவித்த மேலும் 245 இந்திய மீனவர்கள் நேற்றிரவு தனி விமானம் மூலம் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். கடந்த 4ஆம் தேதி முதல் கட்டமாக 345 மீனவர்கள்  சென்னை வந்தடைந்தனர். சென்னை விமானநிலையத்தில் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல், முன்னாள் அதிமுக அமைச்சர் திரு. ஜெயகுமார் ஆகியோர் மீனவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர்.